**தமிழர் கலைபண்பாட்டுக் கழகம்,**
**அனைத்துலகத் தொடர்பகம்.**
**10.04.2024**

## தமிழர் கலைபண்பாட்டுக் கழகம் - அனைத்துலகத் தொடர்பகம் நடாத்தும் தமிழின அழிப்பு நினைவுநாள் - மே 18 போட்டிகள்

தமிழீழத்தில் சிங்கள அரசினால் தமிழின அழிப்புத் தொடர்ந்தும் நடாத்தப்பட்டுவருகிறது. 2009 மே 18 முள்ளிவாய்க்கால்வரை சிங்கள அரசினால் நிகழ்த்தப்பட்ட தமிழின அழிப்பின் 15 ஆம் ஆண்டு நினைவாக கீழ்வரும் போட்டிகள் நடாத்தப்படுகின்றன.

1. வரைதல் (ஓவியம்)
2. குறுகிய ஆவணக்காணொளி ஆக்கம்
3. கட்டுரை எழுதுதல்
4. கவிதை எழுதுதல்

**நோக்கம்:**

1. 21 ஆம் நூற்றாண்டில் நடாத்தப்பட்ட உச்சக்கட்ட இனவழிப்பான தமிழின அழிப்பை நினைவுகூருதல்.
2. 2009 மே 18 (முள்ளிவாய்க்கால்) வரை சிங்கள அரசினால் தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்ட மிகக் கொடூரமான தாக்குதல்களையும் அம்மக்கள்பட்ட துயரங்களையும் நினைவூட்டுதலும் அடுத்த சந்ததிக்குக் கடத்திச் செல்லுதலும்.
3. இத்துயரங்களுக்கும் இனவழிப்புக்கும் நீதி தேடுதல்.
4. இனவழிப்பையும் எம் மக்கள்பட்ட துயரத்தையும் பதிவு செய்தலும் ஆவணப்படுத்தலும் வெளிக்கொண்டு வருதலும்.

**போட்டிகள் தொடர்பான விபரங்கள்:**

**வயதுப் பிரிவுகள்:**

| பிரிவுகள் | வயதுப்பிரிவு | பிறந்தநாள் |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு | 10 – 14 வயது | 01.01.2010 31.12.2014 |
| இடைநிலைப் பிரிவு | 15 – 18 வயது | 01.01.2006 – 31.12.2009 |
| மேற்பிரிவு | 19 – 26 வயது | 01.01.1998 – 31.12.2005 |
| அதிமேற்பிரிவு | 27 வயதும் அதற்கு மேலும் | 31.12.1997 ஆம் நாளும் அதற்கு முன்னரும் |

- ஓவியங்கள், கட்டுரைகள், கவிதைகள், குறுகிய ஆவணக்காணொளிகள் ஆகியன தமிழீழத்தில் 2009 மே 18 (முள்ளிவாய்க்கால்) வரை சிங்கள அரசினால் தமிழ்மக்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்கள், அக்காலப்பகுதியில் அவர்கள் அனுபவித்த துயரங்களான: **உணவு இன்மை, பதுங்குகுழி வாழ்க்கை, மருத்துவ வசதியின்மை, குடிநீர் இன்மை, கழிப்பறைகள் இன்மை, மாணவர்கள் கற்க முடியாமல் பங்கர்களுக்குள் வாழ்ந்த வாழ்க்கை, தாக்குதல்களிலிருந்து தற்காத்துக்கொள்ள மக்கள் பட்ட துயரம், வயது வேறுபாடின்றி காயப்படுத்தப்பட்டமையும் துடிதுடிக்கக் கொல்லப்பட்டமையும், தடைசெய்யப்பட்ட ஆயதங்களைப் பயன்படுத்தி படுகொலை செய்யப்பட்டமை, பட்டினியால் ஏற்பட்ட சாவுகள் மற்றும் உயிர் தப்பிய மக்கள் கம்பி வேலிகளுக்குள் அடைத்துவைத்து சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டமை** போன்ற விடயங்களை வெளிப்படுத்துபனவாக அமைதல் வேண்டும்.

- அனைத்துப் போட்டியாளர்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள போட்டியாளர் விபரப்படிவத்தினை முழுமைப்படுத்தி, உங்கள் ஆக்கங்களுடன் இணைத்து kalaipanpadu2024@gmail.com எனும் மின்னஞ்சலில் 30.04.2024 ஆம் நாளுக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.

- தரமான ஆக்கங்களிலிருந்து பரிசில் பெறுவதற்குத் தகுதிபெறும் ஆக்கங்களைச் சமர்ப்பித்தவர்களின் விபரங்கள் 11.05.2024 ஆம் நாள் வெளியிடப்படும்.

- சான்றிதழும் பரிசிலும் தெரிவுசெய்யப்படுபவர்கள் வதியும் நாட்டில் நடைபெறும் மே 18 தமிழின அழிப்பு நினைவுநாள் நிகழ்வில் வழங்கப்படும்.

- இப்போட்டிக்காகச் சமர்ப்பிக்கப்படும் ஆக்கங்கள் எவையும் போட்டி நிறைவடைந்து, முடிவுகள் அறிவிக்கப்படும்வரை சமூக வலைத்தளங்களிலோ வேறெந்தக் குழுக்களிலோ பகிரப்படல் ஆகாது.

- தொடர்புகளுக்கான தொலைபேசி எண்:

  இ. அருண் முகிலன் 0033 782 744 980

1. **வரைதல் போட்டி:**

- ஓவியங்கள் கையினால் வரையப்படல் வேண்டும்.
- கீழ்ப்பிரிவு ஓவியங்கள் A4 ஒரு பக்க அளவிலும் இடைநிலைப்பிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு ஆகிய பிரிவுக-ளின் ஓவியங்கள் A3 ஒரு பக்க அளவிலும் வரையப்படல் வேண்டும்.
- முழுமைப்படுத்தப்பட்ட ஓவியங்களை kalaipanpadu2024@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு 30.04.2024 ஆம் நாளுக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.
- தெரிவுசெய்யப்படும் தரமான ஓவியங்கள் ஆவணத்தொகுப்பாக வெளியிடப்படும்.
- ஒவ்வொரு வயதுப்பிரிவிலும் தெரிவுசெய்யப்படும் 10 தலைசிறந்த ஓவியங்களுக்குச் சான்றிதழும் நினைவுப்பரிசிலும் வழங்கப்படும்.

2. **குறுகிய ஆவணக்காணொளி ஆக்கம்:**

- ஆவணக்காணொளிகள் 3 - 5 நிமிடங்களுக்கு உட்பட்டவையாக இருத்தல் வேண்டும்.
- முள்ளிவாய்க்கால் வரை சிங்கள அரசினால் நடாத்தப்பட்ட தமிழ்மக்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் மக்கள்பட்ட துயரங்களின் நிழற்படங்கள், காணொளிகள் ஆகியவற்றினை அடிப்படையாகக்கொண்டு இவை ஆக்கப்படல் வேண்டும். தேவையெனில் பொருத்தமான கிறாபிக் (Grafic) வடிவமைப்புகளைப் பயன்படுத்தலாம்.
- இவ்வாறு ஆக்கப்பட்ட குறுகிய ஆவணக்காணொளிகள் kalaipanpadu2024@gmail.com எனும் மின்னஞ்சலின் இணைப்பாக 30.04.2024 ஆம் நாளுக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். (அனுப்புவதற்கு: இணையத்தள இணைப்பு, WeTransfer கோப்பு போன்றவற்றைப் பயன்படுத்தலாம்)
- ஆவணக்காணொளி ஆக்கப்போட்டி அனைத்து வயதுப்பிரிவினரையும் ஒன்றிணைத்த வகையில் நடைபெறும். **இப்போட்டிக்கு வயதுப்பிரிவுகள் இல்லை.**
- தெரிவுசெய்யப்படும் 10 தலைசிறந்த ஆவணக்காணொளிகளுக்குச் சான்றிதழும் நினைவுப்பரிசிலும் வழங்கப்படும்.
- தெரிவுசெய்யப்படும் ஆவணக்காணொளிகள் சமூக வலைத்தளங்களில் மக்கள் பார்வைக்காகப் பதிவேற்றப்படும்.

3. **கட்டுரை எழுதுதல், கவிதை எழுதுதல்**

**சொற்கள், வரிகளின் அளவு:**

| **பிரிவு** | **கட்டுரைப்போட்டி சொற்களின் எண்ணிக்கை** | **கவிதைப்போட்டி வரிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு | 50 – 100 சொற்கள் | 8 - 12 |
| இடைநிலைப் பிரிவு | 100 – 150 சொற்கள் | 12 - 16 |
| மேற்பிரிவு | 150 – 250 சொற்கள் | 16 - 24 |
| அதிமேற்பிரிவு | 200 – 300 சொற்கள் | 16 - 24 |

- கட்டுரை கவிதை ஆகியவற்றை மேல் உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்கள், வரிகளின் எண்ணிக்கைக்கேற்ப ஆக்கி, கணினியில் எழுதி kalaipanpadu2024@gmail.com என்னும் மின்னஞ்சலின் இணைப்பாக 30.04.2024 ஆம் நாளுக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.
- தெரிவுசெய்யப்படும் தரமான கவிதைகள், கட்டுரைகள் ஆவணத் தொகுப்பாக வெளியிடப்படும்.
- ஒவ்வொரு வயதுப்பிரிவிலும் தெரிவுசெய்யப்படும் 10 தலைசிறந்த கவிதை, கட்டுரைகளுக்குச் சான்றிதழும் நினைவுப்பரிசிலும் வழங்கப்படும்.

**தமிழர் கலைபண்பாட்டுக் கழகம்,**
**அனைத்துலகத் தொடர்பகம்.**